Registered as a News paper in Sri Lanka பக்கங்கள் 08 விலை ரூபா 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம் 82 ஏப்ரல் (19 - 04 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை : 60

## பல்கலைக்கு 40 வீதம் திறமை அடிப்படையில்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு திறமை அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவு இடம்பெற வேண்டும் என்று உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் நூற்றுக்கு நூறுவீதம் திறமை அடிப்படையிலேயே தேர்ந்தெடு (8 ஆம் பக்கம் பார்க்க)

பரப்புக்கடந்தானுக்கு முன்னேறும்

# இரு நாள் முயற்சி முறியடிப்பு!

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினர் விமானப்படையின் உதவியுடன் இருதினங்கள் பரப்புக்கடந்தான் நோக்கி முன்னேற மேற்கொண்ட நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலினால் தடுத்து நிறுத்தப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமையும், புதன்கிழமையும இராணுவத்தினரால் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு நிகழ்ந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6 30 மணியளவில் ஆட்காட்டி வெளியில் இருந்து பரப்புக்கடந்தானை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றது. விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதல் இராணுவத்தினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியது.

அதேவேளை மோதல் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் இராணுவத்திற்கு உதவியாக சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பலமான குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலில் ஒரு அவ்ரோ விமானமும் மூன்று குண்டுவீச்சு விமானங்களும் தாக்குதலில் ஈடுபட்டன. செவ்வாய்க்கிழமை இம்மோதலின் போது இருபுலிகள் வீரமரணமடைந்தார்கள்.

நானாட்டானிலும் மோதல்

அதேவேளை, நானாட்டானிலும் இருந்து முருங்கன் நோக்கி இராணுவத்தினர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### மன்னாரில் நால்வர்

கடந்த செவ்வாய்க்கிழமை ஆட்காட்டி வெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் லெப். வரதன், இளங்கோ ஆகிய இரு போராளிகளும் அதே இடத்தில் மறுநாள் ஏற்பட்ட மோதலில் ஜீவா (மட்டக்களப்பு) நாயகன் (வவுனியா) ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## ஷெல்லுக்கு மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வலலாய் பகுதியில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதில் மூன்றுபேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 11-00 மணி முதல் மாலை இரண்டு மணி வரை நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலின்போது மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

## நிவாரண அட்டைகள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் தென்தமிழீழ மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண அட்டைகள் நாளை சனிக்கிழமை 4 மணியளவில் பல்கலைக் கழகத்தில் வைத்து மீளாய்வு செய்யப்படவுள்ளது. எனவே அனைத்து தென்தமிழீழ மாணவர்களும் தமது அட்டைகளை மீளாய்வு செய்து கொள்ளுமாறும் மீளாய்வு செய்யத் தவறியவர்களின் நிவாரணங்கள் இடைநிறுத்தப்படும் என்றும் தென் தமிழீழ மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டைப் பகுதியில் பவுண் சங்கிலியொன்று விடுதலைப் புலிகளால் கண்டெடுக்கப்பட்டு கோண்டாவில் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

## அன்னை பூபதி நினைவு நாள் ஏற்பாடுகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்திற்கெதிராக உண்ணாநோன்பிருந்து தியாக மரணமடைந்த அன்னைபூபதியின் நினைவுக் கூட்டங்கள் இன்று வடக்கு கிழக்கு பகுதி எங்கும் அமைதியானமுறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த நினைவுதினத்தை முன்னிட்டு வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் தீவுப்பகுதி என குடாநாட்டின் அனைத்து பகுதியிலும் இதற்கான ஏற்பாடுகள் நேற்றமுதல் மும்முரமாக நடந்ததை அவதானிக்கமுடிந்தது.

பல இடங்களில் சிவப்பும் மஞ்சளும் கலந்த கொடிகள் பறந்துகொண்டிருந்தன. ஆங்காங்கே நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அதனுள்ளே அன்னை பூபதியின் உருவப் படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

இதில் குறிப்பாக நீர்வேலி (8 ஆம் பக்கம் பார்க்க)

## முன்பு தவறியோருக்கு வங்கியில் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

முன்னர் பெயர் குறிப்பிடப்பட்டு மீனக் குடியமர்த்தல் நிவாரணம், உற்பத்தித் திறன் தொழில் முயற்சிகளுக்கான நன்கொடை எடுக்கத் தவறியவர்களுக்கான கொடுப்பனவுகள் வங்கிக் காசோலையாக இலங்கை வங்கி ஸ்ரான்லி கிளையில் வழங்கப்படவுள்ளது 20.04 91 சனியன்று பின்வரும் கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு வழங்கப்படவுள்ளது.

மீளக்குடியமர்த்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராமசேவகர்கள் பிரிவுகள் அரியாலை கிழக்கு ஜே 46, அரியாலை மத்தி ஜே 48, வண். வடமேற்கு ஜே. 49, வண். வடகிழக்கு ஜே 50, கந்தர்மடம் ஜே 51, நல்லூர்வடக்கு ஜே 52, திருநெல்வேலி மேற்கு ஜே 54, திருநெல்வேலி கிழக்கு ஜே 55, கோண்டாவில்மேற்கு ஜே. 56, கோண்டாவில்கிழக்கு ஜே 57, கொக்குவில் கிழக்கு ஜே. 58, கொக்குவில் மேற்கு ஜே. 59, (8 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி பிரேமதாசா

## பாராளு. உரையை பகிஷ்கரிக்க நவசமசமாஜக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா இன்று பாராளுமன்றக் கூட்டத்தொடரைத் தொடக்கி வைத்து ஆண்டுத் திட்டம் தொடர்பாக ஆற்றும் உரையை அனைத்து எதிர்க்கட்சிகளும் புறக்கணிக்க முன்வர வேண்டுமென நவசமசமாஜக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்ற நிலைமையினையும், எதிர்க்கட்சிகள்மீதான வேறுபாட்டுணர்வு அதிகரித்து வருவதாகவும், சர்வாதிகாரபோக்கு தலை தூக்கியுள்ளதாகவும் நவசமசமாஜக்கட்சி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையில் பொதுமக்கள் கொல்லப்படுவதையும், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படுவதையும், கடத்தப்படுவதையும் நவசமசமாஜக்கட்சி எடுத்துக்காட்டியுள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதியில் நடைபெறும் போரினால் பொதுமக்கள் துன்பப்படுவதையும், விலைவாசி உயர்வு பற்றியும், நவசமசமாஜக்கட்சியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதியின் உரையைப் புறக்கணிக்க முடிவுசெய்துள்ளது.

## திருமலை காட்டுப்பகுதியில் நான்கு இராணுவம் பலி

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்தின் காட்டுப்புறத்தில் ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## கிழக்கில் 61 தமிழர் இராணுவத்தால் கைது

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டம் சம்பூர்கிராமத்தில் பத்துத் தமிழ்ப் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. மேலும் மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையில் ஐம்பத்தி யொருபேரும் கைதுசெய்யப்பட்டதாக தெரியவருகிறது.

## வாடிக்கையாளர் கைவிசேடம் வங்கிக்கு வரவில்லை

(யாழ்ப்பாணம்)

வங்கிகள் வருடப்பிறப்புக் கொண்டாட்டங்களுக்கென அனுப்பிவைக்கப்படும் பணம் இம்முறை வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. வருடா வருடம் அனைத்து வங்கிகளுக்கும் வருடப்பிறப்பு வரும்போது அதனை முன்னிட்டு கைவிசேடம் வழங்கவும், புதிய கணக்குகள் ஆரம்பித்து புதிய வாடிக்கையாளர்களை இணைத்துக்கொள்வதற்கும் ஏதுவாக குறிப்பிட்ட தொ (8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினைக்கு கௌரவமான ஒப்பந்தம் - ஜெயலலிதா

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் புதிய கௌரவமான இந்திய - இலங்கை ஒப்பந்தம் மொன்றே அங்குள்ள இலங்கைத் தமிழ் மக்களின் இனைலத் தீர்க்க இயலுமையாகும் என்று அ. இ. அ. தி. மு. க. வின் தேர்தல் பரப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் போராளிகள் தமிழக மண்ணைத் தளமாகப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், இலங்கைப் போராளிகளின் தவறான நடவடிக்கைகளால் அவர்கள் தமிழக மக்களின் ஆதரவையும், இலங்கைத் தமிழர்களின் ஆதரவையும், மத்திய அரசின் ஒத்துழைப்பையும் இழந்து விட்டார்கள் என்றும் அத்தேர்தல் அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

## குர்திஷ் அகதிகளுக்கு உதவ ஐ. நா - ஈராக் உடன்படிக்கை

(ஜெனிவா)

குர்திஷ் அகதிகளுக்கு உதவும் முகமாக உடன்படிக்கை ஒன்றில் ஈராக்கும் ஐ. நாவும் கையெழுத்திட்டிருப்பதாக ஈராக்கிய அதிகாரிகள் கூறியுள்ளனர். ஈராக்கின் தென்பகுதியிலும், ஈராக் வடபகுதி குர்திஷ் பிரதேசத்திலும் தோன்றிய கிளர்ச்சியினை ஈராக் துருப்புக்கள் அடக்கியபின்னர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வருமானம்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்திலும் சீவல் தொழிலாளர் எவரும் உதவிக்கு கிடையாது. சங்கம் ஏனோ தானோ என்று இருந்துவிட்டது. மனித நேய அடிப்படையில் எனது கவளுமரங்களைச் சீவுவதற்கு சங்க மாற்று ஒழுங்குகள் எதுவும் செய்யவில்லை. பெயரில்தான் கூட்டுறவு. நடைமுறையில் கூட்டுறவு என்பதே இல்லை. கைகொடுத்து உதவத் தொழிலாளி எவரும் இல்லாததால் எனது மரங்கள் பழுதடைந்தன.

அவர் மேலும் தொடர்ந்தார்:

சங்கத்தில் காசில்லாதவர்கள் பாடு கஷ்டம்தான். வேறு சில சங்கங்களில் மரம் கட்டுவதற்கு முன்னமே காசு கொடுக்கிறார்கள். ஒருபோகப் சீவலுக்கு பெண் பனைக்கு ரூபா 75ம் ஆண் பனைக்கு ரூபா 50ம் கொடுக்கின்றார்கள். மரத்திலிருந்து தவறிவிழுந்தால் ரூபா 15,000. கை; பாளை சீவும்போது சீவுப்பட்டால் பண உதவி. அதைவிட என்ன உதவி இருக்கிறது?

''உங்களுக்குக் கஷ்டம் எதுவும் இல்லைத் தானே'' என்று ஆரம்பித்தேன்.

தப்புத்தண்டா ஏதும் வந்துவிடுமோ என்ற பயத்தில் அவரது மனைவி குறுக்கிட்டு, ''நாங்களும் எங்கள் உறவினர் குடும்பம் ஒன்றை வைத்துப் பார்க்கிறோம். அவரின் குடும்பம் பெரிது ஐந்து பிள்ளைகள் என்றார். அதை ஆமோதிப்பது போல அல்போன்சஸ்ஸின் உதவியில் வாழும் குடும்பத்தின் தலைவர் பேடிற் தலையை அசைத்துக்கொண்டார்.

அல்போன்சஸின் வருமானம் பற்றிய சந்தேகங்களைப்பற்றி அலசலாமென்று பண்டத்தரிப்பு கோவிற்பற்று மேற்படி சங்கத்தின் மேலாளர் பீற்றர் பியன் வெனுவை அலுவலகத்தில் சந்தித்தோம். வாராந்த மாநாடு என்று பல உத்தியோகத்தர்கள் காத்திருக்கக் கொடுப்பனவுப்பட்டியலை மேலோட்டமாகக்காட்டினார் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில கொடுப்பனவுகளை மாத்திரம் குறிப்பெடுத்துக் கொண்டோம். அவை வருமாறு:

1990 ஆவணி 6-12 ஆம் திகதிவரை வழங்கிய கள்ளு 805 போத்தல்கள். மொத்தப் பெறுமானம் ரூபா 3648.75 சமூக சேமலாப நிதிக்கழிவு போக தேறிய வருமானம் ரூபா 3579.00

1991 மாசி 1ஆம் வாரம் 508 போத்தல்கள். திரட்டிய மொத்த வருமானம் ரூபா 3810.00.

1991 பங்குனி 13-19ஆம் திகதி வரை 780 போத்தல்கள் திரட்டிய மொத்த வருமானம் ரூபா 4680.00.

ஒய்வூதியத்துக்கென 100க்கு ஒரு வீதமும் மற்றும் சேமலாபத்திற்கும் வருமானத்தில் கழிவுசெய்வதாக மேலாளர் எம்மிடம் தெரிவித்துவிட்டுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அவசர அவசரமாக எம்மிடம் விடைபெற்றுக் கொண்டார்.

இது ஒரு புறமிருக்க.

''அதிகம் சம்பாதிக்கிறார்கள், வீட்டிலும் சற்று வேலை விற்கிறார்கள். ஆக்கும்'' என்றோம் ''அதில் என்ன சந்தேகம்?'' என்று எம்முடன் நின்ற விரிவாக்க அதிகாரி பத்திலுக்குக் கேட்டார். அவசரமாக எம்மிடம் விடைபெற்றுக் கொண்டு நகர்ந்த சங்கத்தின் மேலாளர் பீற்றர் பியன் வெனுவும் அவர் கூற்றை ஆமோதித்தார். ''வீட்டில பெண்கள் கறி, மிளகாய் போன்ற அன்றாடத் தேவைகளைக் கவனிக்கச் செய்யும் தொழில் இது; அதுக்கு விதிவிலக்கு இல்லை என்றார் விரிவாக்க அதிகாரி. வேலியே பயிரை மேயும் கதை விரிவாக்க அதிகாரியின் கதைக்கும் காரணம் இல்லாமல் இருக்காது.

சந்திப்பு ஈ.ஆர்.இ.

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
நூற்றாண்டு விழா
நிறைவாக
# முன்னோர், மூத்தோரைக் கௌரவித்தல்

யாழ்ப்பாணம் இந்து சமூகம் தனது முன்னோர் மூத்தோரைக் கௌரவிக்க இனிய விழாவொன்றினை எடுக்கின்றது.

காலம்: 1991-04-20 சனிக்கிழமை பி.ப.3-00மணி
இடம்: குமாரசுவாமி மண்டபம்

★ யாழ் இந்துவின் வெள்ளிவிழாக் கால சேவை நாயகர்களை பொன்னாடை போர்த்துக் கௌரவித்தல்.
★ நூற்றாண்டு காலத்துள் சேவையிலிருந்த அதிபர்களின் உருவ ஓவியங்களைத் திரை நீக்கம் செய்தல்.

யாழ். இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிலும் அதன் பெருமையிலும் அக்கறை கொண்டோரை ஒவ்வொருவரையும் இரு கரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

சுந்தரம் டிவகலாலா
சே. சிவராசா
இணைச்செயலர்கள்

க. சி. குகதாசன் — அதிபர்
ஆ இராஜகோபால் — செயலர், கலாசாரக்குழு

(B 2381)

---

# 6ஆம் மாத நினைவஞ்சலி



## சர்டன் கட்டி

(அம்மையப்பிள்ளை கிருஷ்ணராஜா)

ஜனனம் 09-02-1968 — வீரமரணம் 19-10-1990

நீ...
தலைவனின் உறுதியான பாதையில்
கட்டுக்கோப்பான, இலட்சியப்பாதை விலைபேசா
அமைப்பில் தன்னைச் சமைத்தல்
களத்தில் வளர்ந்த கட்டிப்புலி!
மாவீரர் வரிசையில் இடம்பெறத் தியாக
சரித்திரமாகிய எம் அன்புத் தம்பி
உம் கனவை நெஞ்சினில் ஏந்தி
சரித்திரம் படைப்போர் வேங்கைகள் இங்கே!
இம் மண்ணின் விடுதலைக்காக
இம் மண்ணிலிருந்து விடுதலையான
இலட்சிய பூர்வ விடுதலையாளனில்லை நாம்
உம்மை இழந்த துயரத்திலிருந்து!
தலைவனின் பாதையில் நின்
தோழர்கள் பயணம் தொடர்ந்து
உம் கனவை நனவாக்கிடும்
தூரம் வெகு தொலைவில்லை;
வளரும் தேசம் தினை
எம் மண்களில் தேசமாய் வளர்வது
நீ எம்மோடு வாழ்ந்த நாட்கள்
உம்மை நாம் அடையும் வரை
உம் நினைவுகளும் எம்மோடு!

இது வரை இலட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்த மாவீரர்களுக்கும் எம் இதய அஞ்சலிகள்!

கிருஷ்ணராஜா வீதி, பருத்திநகர். — குடும்பத்தினர்

(B - 1352)

---

## வளைந்து...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாம்கணப் பொழுதில் நடந்து முடிந்துவிடும். முதலாவது பேட்ரியட் குறி தவறினாலும் இரண்டாவது பேட்ரியட் இலக்காக அழிக்கத் தவறாது. 10 முதல் 30 ஆயிரம் மீட்டர் உயரத்தில் இந்த அழிப்பு வேலை சம்பவிக்கும். ஒரு ஸ்கட் புறப்பட்டதிலிருந்து 8 நிமிட நேரத்துக்கெல்லாம் இந்த நாடகம் முடிந்துவிடும்.

பேட்ரியட் ஸ்கட்டை அழிக்கத் தவறுமாயின் இரண்டும் விநாடிக்கு 1.6 கி.மீ வேகத்தில் ஒன்றை ஒன்று கடந்து தரையில் விழுந்து சேதப்படும்.

### குறூஸ்

வளைகுடாவில் அமெரிக்கா குறிதவறாது தாக்கும் குறூஸ் ஏவுகணைகளையும் உபயோகித்தது. ரொம ஹொவாக் என்றழைக்கப்படும் இந்த ரக ஏவுகணைகள் ஒலியை எழுப்பிக்கொண்டு வான் வெளியில் தாழ்வான மட்டத்தில் ஊடறுத்துச் செல்லும்.

இந்த ஏவுகணைகள் ஒவ்வொன்றின் பெறுமதி 0 லட்சம் அமெரிக்க டாலர்களாகும். இந்த ஏவுகணைகளின் விசேஷம் என்னவென்றால், இதற்கென்று ஓர் தளம் தேவையில்லை. கப்பலில் அல்லது நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து இதை ஏவலாம். 42 விநாடிகளுக்கு எரிந்து கொண்டே இந்த ஏவுகணைகள் செல்லக் கூடியவையாகும். ராடர் கருவிக்கும் குறூஸ் அகப்படாது. இது ஒரு மணி நேரத்துக்குநெளிந்து சுழிந்து செல்வது போல வளைந்து வளைந்து செல்லக் கூடியவை.

மிக நுணுக்கமாக இலக்கு வைக்கக் கூடியதாக இது தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஏவுகணைகளுக்கு பிரிட்டிஷ் அலாம் ஹாக் குருசிஸ் ஏவுகணைகளும் எந்த வகையிலும் குறைந்தவையல்ல. ஈராக்கின் கேந்திர நிலையங்களைத் தாக்குவதற்கு ஆரம்பத்தில் இந்த ரக ஏவுகணைகளே பாவிக்கப்பட்டன. ★

---

# அதிகாரிகளுக்கு பயிற்சி

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள 150 அதிகாரிகளுக்கான பயிற்சிகள் இன்று வெள்ளிக்கிழமை பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சில் நடைபெறவுள்ளன.

கனடா அரசாங்கத்தின் உதவியுடன் நடக்கும் இப்பயிற்சியில் 1988 ஆம் ஆண்டில் நிர்வாக சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அதிகாரிகள் பயிற்சி பெறுவர். இந்த அதிகாரிகளுடைக்கு மூலம் இலங்கையில் பொது நிர்வாக சேவைகள் தொடர்பான அதிகாரிகளின் பற்றாக்குறையினால் நிலவும் குறையை நிவர்த்தி செய்ய உதவுவார்கள் எனவும் கூறப்படுகிறது.

---

## ஆறாத காயம்..

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

டெனப் பதில் சொன்னான் பிரகலாதன். இல்லை. மற்றவர்களைப் பெயர் சொல்லித்தான் கூப்பிடுறநாங்கள். ஆனால் உங்களை அப்பிடிக் கூப்பிட்டால் உங்களுக்கும் மரியாதையில்லை பாக்கிறவையும் ஒரு மாதிரி நினைப்பினம். என்டாலும் எங்களுக்குக் கீழ வேலை செய்யிற ஆளை நாங்கள் 'ஐயா' என்டும் கூப்பிட ஏலாது தானே எனப் பல்லை இளித்தார். வேட்டிக்காரர்.


எங்கிருந்து தான் இந்தக் கோபம் வந்ததோ தெரியாது பிரகலாதனுக்கு சடக்கென எழும்பி பையைப் பறித்து எடுத்தான் ''நான் எனது தகுதிக்கும், திறமைக்கும் தான வேலை கேட்டு விண்ணப்பித்த நானே தவிர என்ர சாதிக்கல்ல'' என்ற குரல் அவல அறையெங்கும் எதிரொலித்தது

பிரகலாதன் தனது கோபத்தையெல்லாம் சைக்கிள் பெடலில் காட்டி உதைத்துக் கொண்டான். ★

---

# நினைவு கூருகின்றோம்...

## 1991-04-19



அன்னைபூபதி

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் அக்கரைப் பற்றில் சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
லெப். வன்னி (வே. வன்னியசிங்கம் - கம்பிளுவில்)
1988ஆம் ஆண்டு தமிழ் மக்களின் விடிவிற்காக உண்ணா விரதமிருந்து உயிர்நீத்த
அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
இதே ஆண்டு செட்டிபாளையத்தில் இந்தியப் படையினராலும் தேசத்துரோகிகளாலும் கொல்லப்பட்ட
கலா (பொன்னம்பலம் சந்திரகாந்தினி - ஆரையம்பதி)
இதே ஆண்டு பாவற்கொடிச்சேனையில் இந்தியப்படையினராலும் தேசவிரோத சக்திகளாலும் கொல்லப்பட்ட
லூக்காஸ் (மாணிக்கப்போடி கணபதிப்பிள்ளை - கொக்கட்டிச்சோலை)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்,

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B 2384)

# ஈழநாதம்


## வெள்ளி மஞ்சரி

பறிபோன உரிமைகளைப் பிச்சையாகப் பெறமுடியாது. தீர்மானங்கள் மூலமோ மன்றாடுவதன் மூலமோ நியாயம் பிறக்காது. ஆடுகளைத்தான் கோயில்களின் முன் வெட்டுகிறார்களே ஒழிய, சிங்கங்களை அல்ல. சிங்கங்கள் போல சீறு கொண்டு எழுங்கள்!

— டாக்டர் அம்பேத்கார்



## துயரத்தைத் தொலைத்திடு!



துளிர் விடும்
கிளை ஒன்று
தூக்கம் கொள்கிறது.
தன் துயரத்தின்
கதை தனை
கனவுகளில் வாசிக்கிறது!

கூட்டின்
சொந்தக் குருவியே!
உன்
குடும்பம்
கொளுத்தப்பட்டதா?
உன்
குடிசை
கொள்ளையாடப்பட்டதா?

மனைவியை —
நேசிக்கும்
குற்றத்திற்காக
மனிதனுக்கு


மாடுகளின்
பட்டியா?

கிழக்கிலிருந்து
வந்த —
கிளியே —
உன் பிரதேசம்
அமாவாசையுடன் அல்லவா
ஐக்கியமாகிவிட்டது!

நீ எழு!
உன் தேசத்தின்
ரத்தம் —
நம் தேசத்தின்
வரலாற்றுப்
புத்தகமாகட்டும்!

தூக்கமும்,
துக்கமும்
தொலையட்டும்! தொலையட்டும்!

- வவுனியா நிலீபன்





வன்னிமண்ணில் இரணைப்பாலை என்ற பகுதி. இரண்டு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். தடிகளால் செய்யப்பட்ட விளையாட்டுத் துப்பாக்கி அவர்கள் கைகளில். ''நான் மொக்கன்றோ மாமா; நீ குலத்தார் மாமா'' என்றான் ஒரு சிறுவன். ''டேய் டேய் ஆமி வாறான்'' என்றான் அடுத்த பையன். குப்புறப் படுத்தபடியே துப்பாக்கியை நீட்டிய இவர்களது வாய் டுஷ் டுஷ் என உச்சரித்தது. அந்தளவுக்கு சிறுவர்கள் மனதில் ஒரு பதிவை ஏற்படுத்தியவன் மொக்கன்றோ. இவனது பெயரைச் சரியாக உச்சரிக்கத் தெரியாத மக்கள் கூட்டத்தினிடையேதான் இவன் வாழ்ந்தான்; இன்றும் வாழ்கின்றான் மொக்கன்றோ.

சில சொற்களுக்கு காலப்போக்கில் அர்த்தம் மாறிவிடுவதுண்டு. நாற்றம் என்ற தமிழ்ச் சொல் வாசனை என்ற அர்த்தமுடையது. ஆனால் இன்றோ நாற்றம் என்பது துர்மணத்தை மட்டுமே குறிக்கும் சொல்லாகிவிட்டது. தோழமை உணர்வை வெளிப்படுத்தும் அருமையான சொல்லான தோழர் என்ற சொல்லை அதற்குச் சம்பந்தமில்லாதவர்கள் கூடுதலாக உச்சரித்ததனால் அதற்குக்கூட இப்போது வேறு ஓர் அர்த்தம் உருவாகிவிட்டது. மொக்கன் என்ற சொல்லும் அதேபோலத்தான். அந்தக் காலத்தில் மூளையில்லாதவனைக் குறிக்கும் அந்தச் சொல் தற்போது மிகத் துணிச்சலானவனைக் குறிப்பிடுகிறது. அதனால் தான் மக்கன்றோ என்று குறிப்பிடப்பட்ட கனகராயன் குளத்தைச் சேர்ந்த சதாசிவம் புலேந்திரன் காலப்போக்கில் மொக்கன்றோ என்று அழைக்கப்பட்டான்.

மொக்கன்றோ! குழப்படி என்பது இவனது இரத்தத்தில் ஊறிய குணம். ஒவ்வொரு குடும்பத்திலும் குழப்படிகாரப் பிள்ளைகள் இருப்பதுபோல புலிகளுக்குள் ஒரு குழப்படிகாரன் மொக்கன்றோ குழப்படிகளாலேயே இயக்கத்தில் மிகவும் பிரபலமானவன் என்றால் இவன்தான். ஆனால் வன்னி மக்களைப் பொறுத்தவரையோ இவன் ஒரு கதாநாயகன்தான்.

இவனை நினைவுகூரும் ஒவ்வொரு போராளியும் ஒவ்வொரு கட்டத்திலும் இவனது குழப்படிகளைச் சொல்லும்போது கூடவே மொக்கன்றோ என்ற காரணப் பெயருக்குரிய இவனது துணிச்சல், ஆபத்துக்களை தானே ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை என்பனவற்றை இன்னும் நினைவு கூருகின்றனர். இவனை, இவனது திறமையை இனங்காட்டிய காலம் புலிகள் –இந்தியப் போர் நிகழ்ந்த காலமாகும். இவனது பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த தாடி பாலாவின் மரணம் இவனைப் பாதித்தது உண்மைதான். அதற்குப் பதிலடி கொடுத்தே ஆகவேண்டும் எனத் தீர்மானித்த இவன் தொலைத் தொடர்புக் கருவியினூடாக இந்தியப்படையினரோடு தொடர்பு கொண்டான்.

''பொறு பொறு இதுக்கு ரெண்டுமூண்டுநாளில உனக்கு அடிக்காமல் விடமாட்டன்'' என்று சூளுரைத்துவிட்டு நாலாம் நாளே கனகராயன் குளத்தில் இந்தியப்படைக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியவன். இம்மாதிரியான ஓர்மம் புலிகளுக்கே உரிய தனிக்குணம். போராடத்துணிவில்லாதவர்கள் இப்பண்பைக் கொச்சையாக விமர்சித்தாலும் புலிகளைப் பொறுத்தவரை, அவர்களது வெற்றியின், தனித்துவமான பண்பின் அடையாளம் இப்படியான பதிலடிகள்தான்.



இழப்பதற்கு உயிரைத் தவிரவேறு எதுவுமேயில்லை என்ற நிலையிலுள்ள மக்கள் கூட்டத்தில் ஒரு குடும்பத்தவருடன் மேஜர் மொக்கன்றோ.

வற்றாப்பளையில் இவன்தங்கியிருந்த காலம் இவன் இருந்த முகாம் சுற்றிவளைக்கப்பட்ட போது தன்னோடு பத்துப் பேரைமட்டும் வைத்துக் கொண்டு ஏனையோரைப் பாதுகாப்பாக அனுப்பி முற்றுகைக்கு வந்த இந்தியப் படையினரை பத்துப்பேருடனே நின்று சமாளித்ததிரம் மாங்குளம் முகாம் இராணுவத்தினருடனான மோதலில் பகல் நேர சண்டையைத் தானே பொறுப்பெடுத்தமை, இரவு நேர சண்டையின் போது விமானங்களின் கவனத்தைத் தனதுபக்கம் திசை திருப்ப இவன் மேற் கொண்ட நடவடிக்கைகள் இவையெல்லாம் புலிகளின் தலைமைக்குரிய குணாம்சங்களை வெளிப்படுத்திய சம்பவங்கள். இவ்வாறான சம்பவங்கள் தான் போராளிகளின் போராடும் திறனை அதிகரிக்கின்றன. தலைமை முன்னே நிற்கும் போது எந்தப் போராளியுமே பின்னிற்க மாட்டான். இப்படித்தான் புதிய புதிய புலிகள் உருவாகின்றார்கள். இதுதான் புலிகளின் வெற்றியின் இரகசியம்.

மக்களைப் பொறுத்தவரை குடிசைகளே இவனது மாளிகைகள். மொக்கன்றோ செல்லும் இடமெல்லாம் அவனைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். அவர்களின் இன்ப துன்பங்களில் இவனும் ஒரு பங்காளன்... ஆதலால் இவனை எல்லாக் கிராமத்தவர்களுமே சொந்தம் கொண்டாடினர். ஒவ்வொரு இடத்திலும் இந்தியப் படைகளுடன் மோதும் இவனது திறமையை நேரில் கண்ட மக்கள் ''மொக்கன்றோ எண்டா மொக்கன்றோதான்'' என்று குறிப்பிடுவது வழக்கம். இந்தியப்படையினர் கணிசமான ஆயுதங்களை இவனிடம் இழந்துள்ளனர். யாழ் நகரில் இருந்து வன்னியின் அனேக பகுதிகள்வரை இவன் இந்தியப்படையினரிடமிருந்து போர் மூலம் ஆயுதங்களைப்பெற்றுக்கொண்டான். அதுபோலவே கணிசமான இந்திய ஜவான்களை இவனது துப்பாக்கி குறிபார்த்துள்ளது.

புவியியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாவும் இயக்கத்திற்கு சாதகமில்லாத இடங்களையே இவன் தனது நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடமாகத் தீர்மானிப்பான். அந்த இடங்களில் இராணுவத்தினரின் கை ஓங்காது தடுக்கவேண்டும்; அப்பிரதேசங்களை மீட்டெடுக்கவேண்டும் என்பதே இவனது குறிக்கோள். அதேபோல யாராவது இவனது திறமைக்கு சவாலாக ஏதாவது கூறி இவனைச் சீண்டிவிட்டால் போதும்; அடுத்த நாளே தனது திறமையை மீண்டும் உறுதிப்படுத்திக் காட்டுவான். இவனது திறமை உறுதிப்படுத்தப்படும் அந்த மாதிரியான சமயங்களில் அனேக எண்ணிக்கையான கூலிப்படைகளின் மரணம் உறுதிப்படுத்தப்படும்.

ஆனால் போர் முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு வந்ததில்லைஎன்பது இவனது வாழ்விலும் உறுதியாயிற்று. இவனது போராட்ட வரலாற்றில் பல்லாயிரக் கணக்கான ரவைகள் இவனை நோக்கி வந்துள்ளன. ஓரிரு சமயங்களிலேயே ரவைகள் இவன் மீது பட்டன. அச்சமயங்களில் இவன் காயத்துடன் தப்பி விட்டான். ஆனால் ஒரு ஷெல் இவன் மரணத்துக்குக் காரணமாகிவிட்டது.

மொக்கன்றோ இம் மண்ணைப்பிரிந்த இடம் ஆனையிறவு. ஆனையிறவில் சிறிலங்காப் படைகளுடன் ஏற்பட்ட மோதலின்போது இவனது வீர மரணம் சம்பவித்தது. 24.01.91 அன்று இவனது உயிரை ஒரு ஷெல் குடித்தது. ஆனால் இவன் வன்னியின் மண்ணில் வாழும் மக்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு குடிசைகளுக்கும் சொந்தக்காரனாய் உலாவி வருகின்றான்.

# ஆறாத காயம்

'இங்கை வா தம்பி'! பூஜை அறையிலிருந்து சாம்பசிவக் குருக்களின் குரல்கேட்டு வாசலருகே சப்பாத்துக்குள் காலைத் திணித்துக்கொள்ள சிரமப்பட்டுக் கொண்டிருந்த பிரகலாதன், அதை அப்படியே விட்டுவிட்டு மெல்ல எழுந்து தந்தையிடம் சென்றான். காலை நேரச் சிவபூசையை முடித்துக்கொண்ட குருக்கள் இடுப்புப்பட்டியிலிருந்த விபூதிப் பையிலிருந்து சிறிதளவு விபூதியை எடுத்து பிரகலாதனின் நெற்றியில பூசியபடி "கோயிலை சுத்திக் கும்பிட்டிட்டுப் போ. இந்த வேலை கட்டாயம் கிடைக்கும்" என ஆசி கூறினார். கண்களை ஒரு தரம் மூடி மௌனமாகப் பிரார்த்தித்துக் கொண்ட பிரகலாதன சப்பாத்துக்களினுள் காலைத் திணித்து கழுத்துப் பட்டியையும் சரிசெய்து கொண்டு தனது சைக்கிளில் ஏறிக்கொண்டான். 'கவனமாய் பார்த்துப் போட்டு வா மோனை' பாட்டி வீட்டுக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள். 'அம்மா நான் போட்டு வாறன்' எனறபடி சைக்கிளை மிதிக்கத் தொடங்கவும் 'சேர்டிபிக்கேட்டுகளை எல்லாமெடுத்திட்டியோ அண்ணை' எனக் கேட்டுக்கொண்டு ஓடி வந்தாள் தங்கை. 'ஓமோம'! எனக் கூறிக்கொண்ட பிரகலாதன் தன் பயணத்தைத் தொடங்கினான்

'சப்பாத்தும்,ரையும்,லோங்சும், சேட்டுமாய் பெடியன் வெளிக்கிட்டுப் போறதை ஆரும் கண்டாலும் கண்ணூறு படுமோம். அவன் வந்த உடனையே திஷ்டி சுத்திப் போடவேணும் பிள்ளை கண்டியோ' பாட்டி மெல்லிய குரலில் தன் மகளுக்குக் கூறிக் கொண்டாள்.

''இதுதான் அவனுக்கு முதல் இண்டவியூ எண்டாலும் இந்த வேலை கிடைத்திட வேணும, அம்பாளுக்கு நான் நேர்த்தி வைச்சிருக்கிறன். இந்த இருபத்திரண்டு வருஷமாய் எவ்வளவு கஷ்டப்பட்டு படிச்சது பிள்ளை'' அம்மா தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

'அவையள் கேட்டதிலும் பார்க்க அண்ணாவுக்கு தகுதி கூட இருக்கு' மற்றது 'கோசலா எண்டர் பிரைசஸ்' மனேஜிங் டைரக்டர் அப்பாவுக்கும் தெரிஞ்சவர் தானே. ஆனபடியால இந்த வேலை கட்டாயம் கிடைக்கும் நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம'என்றாள் கங்கா. அம்மாவுக்கு இருக்கிற பிரஷர் வருத்தம தேவையில்லாத யோசனைகளால கூடிவிடுமோ என்ற பயம் அவளுக்கு.

குடும்பத்தவர்களின் கற்பனைகளுக்கு கனம் அமைத்த அந்த நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கிடைத்த முந்தாநாள் முதல் வேலையே கிடைத்துவிட்டது போன்றதொரு மகிழ்ச்சி பிரகலாதனுக்கு.

□

கால்களிரண்டும் சைக்கிள் பெடலை அழுத்திக்கொண்டிருந்தன; பிரகலாதனின எண்ணம் எங்கெங்கோ சுற்றிச் சுற்றி அலை மோதியது. இந்த வேலை கிடைத்தால் முதல் மாதச் சம்பளத்தை எப்படிப் பகிர்வது என எண்ணியது ஒரு கணம் சம்பளம் எடுத்ததும் முதல் வேலையாக அம்பாளுக்கு ஒரு சகஸ்ர நாம அர்ச்சனை செய்விக்க வேண்டும். அம்மாவுக்கு ஒரு சாறி, தங்கைக்கு உடுப்பு வாங்கிக் கொடுக்க வேணும். இது கொழும்பில் நிற்கும்போது வாங்கிய சப்பாத்து பழசாகிப் பழுதாய்ப் போச்சு புதுசு வாங்க வேணும அப்பாவுக்கும் ஏதாவது வாங்கிக் கொடுக்க வேணும். ஒரு இருநூறு ரூபாய் எண்டாலும் ஒவ்வொரு மாசமும் மிச்சம்பிடிக்க வேணும். தங்கச்சியின்ரை கலியாணத்தின்போது உதவும். இப்படியே எண்ணிக்கொண்டிருக்கையில் இவை அனைத்துக்கும் எவ்வளவுகாசுதேவைப்படும்? அம்மாவின் சாறிக்கு முன்னூறு தங்கச்சிக்கு முன்னூறு, சப்பாத்திற்கு இருநூற்றைம்பது, சேமிப்புக்கு இருநூறு இவ்வளவிற்குமே ஆயிரத்து நூற்றைம்பது ஆகுது.

எவ்வளவு சம்பளம் தருவார்கள்? கோசலா எண்டர் பிரைசஸ் பெரிய நிறுவனம தானே. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம என்றுதானே விளம்பரப்படுத்தினவர்கள். எவ்வளவு சம்பளம் கேட்கலாம்.

எனது தேவைகளோடை கணக்குப் பார்ததால குறைஞ்சது மாதம ஆயிரத்து ஐநூறு ரூபாயாவது வேணும. அவ்வளவு தருவினமோ... பெரிய எக்கவுண்டன்மாருக்கே ஆயிரத்து ஐநூறு, இரண்டாயிரம தானே குடுப்பினம. நான் கேட்கிற சம்பளம்கூடிப்போச்சு தெண்டால சிலவேளை வேலை இல்லை எண்டு சொல்லிப்போட்டா என்ன செய்யிறது? எதுக்கும் எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறீர்? என்ற கேள்வி வந்தால் நேரடியாய் மறுமொழி சொல்லக் கூடாது. ஒரு தீர்மானம் பிறந்தது. ஆனால் என்ரை ஜி.சி.எஸ். ஏ வெஸ்ட் பாட் சேர்ப்பிகேட்டை பார்த்த உடன் கட்டாயம் வேலை போட்டுத் தருவினம் அதோட புக்கீப்பிங் செய்திருக்கிறன். இங்கிலீசில் சோர்ட்காண்ட் ரைப்பிங் செய்வன் தமிழ் ரைப்பிங்கும் கொஞ்சம செய்யலாம். அதோட கொழும்பு 'நாணயக்கார' கம்பெனியில் 'எக்கவுண்ட் கிளார்க்'காக ஒரு வருடம் வேலை செய்த அனுபவமும் இருக்கு. இதுக்கு மேல எக்கவுண்ட் கிளார்க் வேலைக்கு என்ன தகுதி வேணும்? ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு குறைய எண்டால் வேலைக்கு போய்வரக் கட்டுப்படியாகாது. முதலில் சம்பளத்தில் கொஞ்சம் இறுக்கிப் பிடிக்கப் பார்த்தாலும எனது திறமையைக் கண்ட பிறகு சட்டாயம் கூட்டித் தருவினம். இப்படியே எண்ண அலைகளில் மிதந்தபடி அராலியிலுள்ள தனது வீட்டிலிருந்து புறப்பட்ட பிரகலாதன் அராலிப் பாலம், கல்லுண்டாய் வெளி கடந்து துர்மணம் வீசி வரவேற்கும் பொம்மைவெளியின் பகுதிக்கு வந்தடைந்த போது வசந்தபுரம் என்ற பெயர்ப்பலகைகண்ணில் பட்டது குப்பைகள், கழிவுகள் வீதியின் இருமருங்கும் நிறைந்து கிடக்க குப்பைமேடாக காட்சிதரும் இப்பகுதிக்கு வசந்தபுரம என்று ஏன் தான் பெயர் வைத்தார்களோ?

## திருகணை

இதைப்பற்றி நான் யோசித்து என்ன பயன்? நேரம என்னாச்சுதோ என மனம் நினைக்கவும் கண்கள் கைக்கடிகாரத்தை நோக்கிப் பார்வையை செலுத்தின. சின்னக் கம்பியையும், பெரியகம்பியையும் தாண்டி வேகமாய் ஓடும் செக்கன் கம்பி பற்றியெல்லாம் கவலைப்படும் அவசியமற்ற டிஜிட்டல் கடிகாரம் எட்டுநாற்பத்தைந்து எனத் துல்லியமாகக் காட்டிற்று. இன்னும் பதினைந்து நிமிடம் தான் இருக்கு கெதியாய்ப்போய்ச் சேரவேணும் என்ற சிந்தனை பிறந்த வேளையிலேயே கால்கள் வேகமாக உதைக்கத்தொடங்கின. சைக்கிளின் வேகத்தையும் கடந்து பிரகலாதனின் மனம் கோசலா எண்டர் பிறைசசின் வாசலுக்கு விரைந்தது.

□

யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் ரோட்டிலிருந்து உள்ளேதள்ளி மூன்று மாடிக் கட்டிடமாய்உருப்பெற்று நிற்கிறது "கோசலா எண்டர் பிரைசஸ்". உயர்ந்த மதிலின் முன்பாக ஒரு காவற்கூண்டு போல பாதுகாப்பு உத்தியோகத்தரின இருப்பிடம். அதற்குச் சமீபத்தில் அகலமான இரும்புக் கிறில் கேற்று. இரும்புக் கேற்றின் ஒரு ஓரத்தில் ஆட்களுக்கான நடைபாதைவழி வரிசையாக நிற்கும் குரோட்டன்களும் அசோக மரங்களும்மனதைக் கொள்ளையிடும் கோலம் தோற்றுவிக்கும் ஊடாகத் தெரியும் ஒரு ஓரமாக உயர்ந்து நிற்கும் கராஜ் கொட்டகை. அதனுள் ஓடாத வாகனங்கள்பல அர்த்தம் இழந்துவிட்ட ஆடம்பரங்களாக கவனிப்பாரற்றுக்கிடக்கிறது.

அங்குமிங்குமாய் பலர் போய்வந்து கொண்டிருந்தனர். மெல்லிய குரலில் பேசுவதும் சந்தடியற்று நடந்து செல்வதுமாக இருக்கும் வெளிப்புறத் தோற்றமே ஒரு பிரமையை ஏற்படுத்தும் முன்பாக இருந்த சைக்கிள் பார்க்கில் தனது சைக்கிளை நிறுத்தி பூட்டித திறப்பைக்கையில் எடுத்துக் கொண்டு பாதுகாப்பு அலுவலரிடம் வந்தான பிரகலாதன். அவனைக்கண்ட மாத்திரத்தில், தம்பி என்ன 'இன்டர்வியூவுக்கே' வந்தனீர்? லெட்டர் கொண்டு வந்தனீரோ? கேள்வி எழுப்பினார் பாதுகாப்பு அலுவலர்.

கையிலிருந்த பைலைப் பிரித்து கடிதத்தை அலுவலரிடம் காட்டியபோது அதனை வாங்கிக் கொண்டு, உள்ளே சென்று இருக்கும்படி கூறினார். இவனைபபோல இன்னும் பலர் கதிரைகளில் காத்திருந்தனர் கொத்துக்கொத்தாகப் பூத்திருக்கும் ரோஜாச் செடிகளிலோ, பலவேறு விதமான குரோட்டன்களிலோ மனம் இப்போது லயிக்கவில்லை. மல்லிகைப் பந்தலின் நிழலில் போய் நின்றால் இந்த வெக்கை அவிச்சலுக்கு இதமாக இருக்கலாம். ஆனால் மூடப்பட்ட அறைக்குள் இருந்து வரும் அழைப்புக்கு ஏங்கி இருக்க வேண்டியிருக்கிறதே. எப்படி இந்த இன்டர்வியூ நடக்கும்? யார்யார் இந்த நேர்முகப் பரீட்சையை நடத்துகிறார்கள்? என்னென்ன விதமான கேள்விகள் கேட்பார்கள்? எப்படிப் பதிலளிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலெழுந்தது. அருகில் இருப்போர் எவரும் முன் அறிமுகமாக இல்லாதது பேச்சுக் கொடுக்க சங்கடமாக இருந்தது. நிசப்தத்தை குலைக்கும் பேச்சுக்குரல்களால் வீண் வம்பு நேரலாம என்ற அச்சம்மனத்தில் தோன்றியது. ஒவ்வொருவராகக் கூப்பிட்டு உள்ளே வரிசைக்கிரமமாக அழைத்துக் கொண்டிருந்தனர் ஒவ்வொரு பெயர் கூப்பிட்டபோதும் ஒருவர் எழுந்து உள்ளே செல்ல உள்ளிருக்கும்ஒருவர் வெளியே வர இண்டர்வியூ நடந்து கொண்டிருந்தது.

×

சா. பிரகலாதன் என்ற பியூனின் அழைப்புக் கேட்டதும பிரகலாதன எழுந்து தனது கழுத்துப்பட்டி சரியாக இருக்கிறதா எனச் சரிபார்த்தான். தலைமயிர் ஒழுங்காக இருக்கிறதா எனத்தடவிப் பார்த்

**இளையவன்**

துக்கொண்டான். மெதுவாக எழுந்து ஒருவிதமான கர்வத்துடன் தலை நிமிர்ந்து கம்பிர நடை நடந்து அந்த மூடிய அறையின் உள்ளே புகுந்தான்.

பெரியதொரு மேசையின பின்புறமாக மூவர். சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க தோற்றம். முற்றாக சவரம்செய்த முகம எண்ணெய் தடவி ஒழுங்காக வாரிவிடப்பட்ட தலைமயிர்களை தெளிவாகக் காட்டும் சேர்ட், கழுத்துப்பட்டி இவை நடுவில் இருந்தவருக்குப் பொருந்தும். அவருக்கு வலக்கைப் புறமாக இருந்தவரது தலைமயிர்கள் உள்ளத்தைப் போல வெண்மையாக இருந்தது. வேட்டியணிந்திருந்தார். கோயில், பக்தி விசுவாசம் உள்ளவர் என்பதனை அவரது திருநீற்றுப் பூச்சும், சந்தனப் பொட்டும் எடுத்துச் சொல்லியது. மூன்றாமவர் இடையிடையே வெள்ளிக்கம்பிகளாய் நீட்டிக் கொண்டிருக்கும் மெல்லிய தாடி வைத்திருந்தார். சற்றுப் பருமனான உடம்பும் அவருக்கு இருந்தது.

''குட் மோர்னிங்'' என்றபடி உள்ளே நுழைந்தவன் ''ஐ ஆம் பிரகலாதன்'' எனக் கூறிக் கொண்டு இண்டர்வியூ மேசையை நோக்கி நடந்தான்.

''ஒ.கே. கம் டெக் யுவர் சீற்'' எனப் பதிலளித்தவர் பிரகலாதனின் பைலை வாங்குவதற்காக கையை நீட்டினார். பைலைக்கொடுத்தான்.

''வட். இஸ் யுவர் பாதர்'' (உமது தந்தையின் தொழில் என்ன?) என்று கேள்வியை எழுப்பினார் வேட்டிக்காரர்.

''கி. இஸ் ஏ பிறிஸ்ற் அட் அராலி'' எனக் கூறினான் பிரகலாதன். (அராலிப்பகுதியில் மதகுருவாக இருக்கிறார்) சாம்பசிவக் குருக்கள் ஐயாவின் மகனா நீர் என வியப்புடன் கேட்டார் நடுவில் இருந்தவர்.

ஆம் எனத் தலையசைத்தான மனதில் ஒருவித மகிழ்ச்சியுடன். உம்மை வேலைக்கு எடுத்தால் பெயர் சொல்லிக் கூப்பிடுவதையா ஐயா எண்டு கூப்பிடுவதையா, நீர் ஏற்றுக் கொள்ளுவீர்? எனக் கேட்டார் வேட்டிக்காரர்.

மற்றவர்களை எப்படி அழைப்பீர்களோ அதே போல என்னையும் அழைக்கலாம் சட்

(2 ஆம் பக்கம் பார்க்க)



# ஆடம்பன் கொடியும்...

கவிதை

எதிரி
எமது தேவிக்கு
வெள்ளைச் சேலை
உடுத்திப்பார்க்க ஆசைப்படுகிறான்!
துரோகியோ
அவன் வெட்டிய குழிக்குள்ளே
சல்லாபம் அடிக்கின்றான்!
வீட்டைச் சுற்றியோ
சுகோடு!
அந்நியப்பட முடியுமா?
அடக்கு முறைகள்
எமது தலைமயிரைக்கூட
அசைத்துவிடாது!
சுவாசப்பை
மேலும் மேலும்
விடுதலையை நோக்கியே
விரிவடையும்!
வாருங்கள்
கிழவர் கிழவிகள்
கூனல் நிமிர்த்தி
குறிபார்க்க வைப்போம்!
பூனைகளையும் புலிகளாக்குவோம்!
புறாக்களையும்
கோழிக்குஞ்சுகளையும்
வல்லூறாய் நிமிர்த்துவோம்!
யாரும் அந்நியப்படமுடியாது
இந்த மண்ணில் முளைக்கும்
புல்லும்
சுதந்திரத்தை
சுவாசிக்க வைப்போம்!

— சந்திரபோஸ்

# தியாகச்சுடர் அன்னை பூபதி

**அன்னை பூபதியின் மூன்றாவது நினைவு தினத்தையொட்டி மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தொடர்பகம் வெளியிட்டுள்ள "தியாகச்சுடர் அன்னை பூபதி" என்ற நூலில் இருந்து சில பகுதிகள்**

அன்னை பூபதி மக்களின் கரைகடந்த உற்சாகத்துக்கு மத்தியில், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் தமது ஆயுட்கால உண்ணாவிரதத்தை உறுதியோடு கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

நாளாக ஆக அன்னை பூபதியை சோர்வு தட்டுகிறது. தலை சுற்றலும் ஆரம்பிக்கின்றது. போகப்போக திடீர் மயக்கத்தில் சரிகின்றார்.

எனினும் மறுகணமே தன்னைச் சுதாகரித்துக்கொள்ளுகிறார்.

வைத்தியர்கள் அவரைத் தினமும் வந்து பரிசோதித்துச் செல்லுகின்றனர். முறைப்படி வைத்திய அறிக்கைகள் நாளாந்தம் தயாரிக்கப்படுகின்றன.

அன்னை இவ்வாறு உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றார். இடையில் அமைதிப்படை அதிகாரிகள், இந்திய வீரர்கள் வந்து போகின்றனர்.

அன்னையிடம் சமாதானம் சொல்லப் பார்த்தனர். அன்னையோ இந்திய வீராங்கனைக் கண்டால் காளியாக மாறினார்.

மிரட்டினர், பாய்ச்சா, பலிக்கவில்லை.

கணவர் கணபதிப்பிள்ளை, மக்கள், மருமக்கள் என்று உறவினர்களுக்குத் தூண்டில் போட்டு விரதத்தைக் குழப்பியடிக்க எத்தனித்தனர். ம்... முடியவில்லை.

கணபதிப்பிள்ளை கங்காணியார் குடும்பம் இலேசுப்பட்டதல்ல வீரத் தாயின் பராமரிப்பில் வளர்ந்தவர்கள் அல்லவா?

இந்தியப் படையினர் போட்ட இரையை அவர்கள் விழுங்குவதாவது. இந்தியாவின் சாணக்கியத் தந்திரங்கள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன.

மகாத்மா காந்தியின் உண்ணாவிரதங்கள், மறியல் இயக்கங்கள், சத்தியாக்கிரகங்கள் மூலம் வெள்ளையனை வெளியேற்றிச் சுதந்திரம் ஈட்டிய நவ பாரதத்திலிருந்து வந்த ஜவான்களா அண்ணல் வழியில் அன்னை பூபதி நடாத்தும் அகிம்சைப் போராட்டத்தை அலட்சியம் செய்கிறார்கள்? குழப்பியடிக்க முனைகின்றார்கள்!

உண்மையிலேயே இவர்கள் இந்திய மண்ணில் பிறந்தவர்களா? அந்த இராமராஜ்ஜியத்திலிருந்துதான் வந்தவர்களா? தமிழ்த் திருநாட்டுடன் அனைப் பெறும்ற உந்த அந்தாயகத்திலிருந்து புறப்பட்டவர்களா?

இப்படித் தமிழ் ஈழ நாட்டவர்களுக்கு மாத்திரமல்ல, மனித உரிமை பாராட்டுபவர்களும், மகாத்மா காந்தியின் அகிம்சைத் தத்துவத்தில மதிப்பும் - மரியாதையும் வைத்த உலக மக்களும் மூக்கின் பேல் விரல் வைத்து வியப்புற்றனர்; ஐயுற்றனர்.

அமைதி காக்க வந்து மிஞ்சியிருந்த அமைதியையும் குலைத்துக்கொண்டிருந்த அமைதிப் படையினர் மீது சர்வதேசங்களிலும் வாழும் மனிதாபிமானிகள் அருவருப்புக் கொண்டனர்.

நாட்கள் நகர்கின்றன. அன்னையில் நாடித்துடிப்புகள் அச்சத்தைத் தருகின்றன. வைத்தியர்கள் பார்வையில் சந்தேகம் நிழலாடுகிறது.



இனிமேல் ஊசிமருந்து பாய்ச்சுவதைத் தவிர வேறு வழியில்லை என்று வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

அன்னை பூபதியோ 'எந்தவொரு மருந்தும் எனக்குத் தேவையில்லை. நீங்கள் போய் விடுங்கள்'' என்று நாதனத்தக் கூறி மறுக்கிறார்.

அந்த மயக்கவேளையிலும் தன்னை வைத்தியர்கள் நெருங்கி ஊசி போடாதவாறு எச்சரிக்கையாகவே உள்ளார்.

அன்னையின் பிடிவாதமே வெல்கிறது.

ஒரு பக்கம் மக்களின் கரைகடந்த உச்வேகம்; மறுபக்கம் மனித ஜீவனைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற வைத்தியர்களின் முஸ்தீபுகள் இடையிடையே உண்ணா நோன்பைக் குழப்பியடிக்கும் இந்திய வீரர்களின் தந்திரோபாயங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் அன்னை பூபதி தமது இலட்சியத்தை நிறைவேற்றிக் கோரிக்கைகளை வென்றெடுக்கத் தமது இன்னுயிரைத் துச்சமென மதித்துச் சத்திய யுத்தத்தைத் தொடர்கின்றார்.

ஒன்று. இரண்டு மூன்று. நான்கு, ஐந்து, ஆறு. ஏழு. எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரெண்டு, பதின்மூன்று... இரு வாரங்களல்ல. முழுமையாக முப்பத்தியொரு நாட்கள் அந்த சத்தியப்போர் நடந்து 31ஆம் நாளில் திடுதிப்பெனறு ஓய்கிறது

அங்கு குழுமி நின்ற மக்கள் பேசவில்லை. அசையவில்லை. அத்தனை மக்களின் கண்களும் நீரைச் சொரிகின்றனவே!

அன்னை பூபதியே பிரிந்து விட்டாயா? அத்தனை நாளுமாக இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் உறுதியுடன் இருந்த உன் எழில் உடல் என்ன சாய்ந்துவிட்டதா தாயே? எந்த உயிரைப் பணயம்வைத்து தமிழ் ஈழ மண்ணுக்கு சமாதானத்தைக் கொண்டுவர களத்தில் இறங்கினீரோ அந்த உன்னத ''பணயம்'' பறிபோய் விட்டதா அம்மா? உன் சத்தியப் பயணம் பாதியில் முடிந்துவிட்டதா தாயே?

மட்டுமாநகரம் கதறி அழுகிறது தமிழீழம் எங்கும் சோகமாகியது. ஒவ்வொரு வீட்டிலும் மரண ஓலமே கேட்கிறது.

அன்னை பூபதி உண்ணாவிரதம் பற்றியும், மக்கள் எழுச்சி தொடர்பாகவும் நாளாந்தம் முதற் பக்கச் செய்திகளாக வெளியிட்டு வந்த ஈழத்து அனைத்துப் பத்திரிகைகளும், கடல் கடந்த நாடுகளில் வெளியாகும் தினசரிகளும் தங்கள் நடுநடுங்கிய கரங்களால் அன்னையின் ஆருயிர் 19-04-1988 செவ்வாய்க்கிழமை காலை 8 45 மணிக்குப் பிரிந்த நெஞ்சைத் துணுக்குறச் செய்த அந்தச் செய்தியை சோக வரிகளில் எழுதி வெளியிட்டன.

'பூபதி உயிர்த்தியாகம்
தமிழீழத்தில் சோக
வெள்ளம்''

இப்படி ஒரு தமிழ்த் தினசரி குறிப்பிடுகிறது. எங்கும் கறுப்புக் கொடிகளும், வெள்ளைக் கொடிகளும், தெருக்கள், ஒழுங்கைகள் எல்லாம் வாழை மரங்கள் நட்டு துக்கம் வெளிப்படுத்தப்படுகின்றது. முக்கிய சந்திகள் தோறும் அன்னை பூபதியின் மறைவு இரங்கல்பதாகைகள் தொங்கவிடப்படுகின்றன.

தத்தம் அலுவல்களை அப்படியப்படியே விட்டவாறு ஊழியர்களும், கடைக்காரர்களும் அன்னைக்கு அஞ்சலி செய்ய திரள்கின்றார்கள் வகுப்பறைகளில் புத்தகங்களை விட்டுவிட்டு அன்னையைப் பார்க்க ஓடிவந்த மாணவர்களும் மாணவியர்களும் அங்கு சிலைபோல நின்றனர் சமையல்கட்டில் மரக்கறியும், கையுமாக இருந்த அன்னையர்களும் அப்படித்தான்.

அன்னை பிரிந்ததை எப்படித்தான் தாங்குமோ இவ் ஈழம்? பூபதியம்மா ...

உயிர் பிரிந்த பிற்பாடும் இந்தியப் படையினர் சும்மா விட்டார்களா? உயிரற்ற அந்த உடலுக்கு உபத்திரவம் தர முயலுகின்றனரே!

நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் எனச் சாக்குப் போக்குச் சொல்லி அன்னையின் உடலைத் தாங்களே பொறுப்பேற்றுப் புதைக்க எத்தனிக்கின்றனர்.

கணவர் கணபதிப்பிள்ளையைத் தனிமைக்குக் கூட்டிச் சென்று ஒரு வீரர் மிரட்டுகின்றார்

''நியாயம்தேடித்தான் என் மனைவி உயிர் விட்டாள்''

கணபதிப்பிள்ளை கங்காணியாரின் அச்சொட்டான பதில் இது அமைதிப்படையினருக்கு.

அன்னையர்முன்னணி உறுப்பினர்களும், உறவினர்களும், பொதுமக்களும் அன்னையின் உடலைச் சூழ்ந்து பாதுகாத்துக் கொண்டதால் பிரேதத்தை அப்புறப்படுத்தி சூட்டோடு சூடாக அழித்துவிடும் இந்தியப படையினரின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

( 7ஆம் பக்கம் பார்க்க )

# வளைகுடாப் போரில் மின்னணு ஏவாயுதங்கள்

வளைகுடாப் போரின் போது பரபரப்பாகப் பேசப்பட்ட ஸ்கட், குறூஸ், பேட்ரியட் ஏவுகணைகள மின்னணுப் போர்ச் சாதனங்கள் ஆகும். இதில் ஸ்கட்டும் குறூஸ்ஸும் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளாகும். பேட்ரியாட் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணையாகும்.

இலங்கைப் பணத்திற்கு இந்த ஏவுகணைகள் ஒவ்வொன்றும் பல கோடி ரூபா பெறுமதியானவை.

ஸ்கட்

மின்னணு யுகத்தில் ஸ்கட் ஒரு புரட்சிகரமான ஆயுதம். இந்த ஏவுகணையில் இரசாயன ஆயுதங்கள், நோய்க்கிருமிக் குண்டுகள், அணுகுண்டுகள் என்று பலவகைக் குண்டுகளை வைத்து ஏவமுடியும். இந்த ரக ஏவுகணைகளை ராக்கெட்டுகளைப்போல ஏவ முடியாது. இவற்றிற்கெனத் தனி மேடைகள், நடமாடும் மேடைகள் என்பன உள்ளன. பறக்கவேண்டிய தூரம்,உயரம் இலக்கு. காற்று திசை என்பன ஸ்கட்டில் பொருத்தப்பட்டிருக்கும் கணணிகளுக்குச் செலுத்தப்படும்.

ஸ்கட் - A, ஸ்கட் B என இரண்டுவகை ஏவுகணைகள் வளைகுடாப் போரில் பயன்படுத்தப்பட்டன. கட் - ஸ் என்பது 1950களில் சோவியத் யூனியன் கண்டுபிடித்த R - 11 என்பதின் புதிய வடிவமைப்பாகும். ஸ்கட் - Aயை மேலும் நவீனமயமாக்கி A- சதாம் ஹுசைன் என்றபெயரில் ஈராக்கிற்கு சோவியத் யூனியன் தயாரித்து வழங்கியுள்ளது. இது 600 கி. மீ தூரம் வரை பறந்து தாக்க வல்லது.

ஸ்கட் என்பது சோவியத் யூனியனின் புதிய தயாரிப்பாகும். இதன் நீளம் 11.5 மீற்றர். 900 கி. மீ வரை பறந்து சென்று இலக்குகளைத் தாக்கும். சாதாரண வெடி மருந்துகளை ஒரு தொன்வரை இதில் அனுப்பலாம. அணுகுண்டு என்றால் 5 தொன்களை இது சுமக்குமாம் 1988 இல் ஈரானுடனான போரில் இந்த வகை ஏவுகணைகளை ஈராக் உபயோகித்தது.

பேட்ரியட்

சக்திவாய்ந்த அஸ்திரங்களை வழிமறித்து அழிக்கும் பாசுபதாஸ்திரங்களை எமது

**மதன்**

தொல்சீர் இலக்கியங்களில் நாம் கேள்விப்பட்டிருக்கலாம். அந்த வகையைச் சேர்ந்தது அமெரிக்காவின் பேட்ரியட்.

1966 முதல் பல தோற்றங்களை எடுத்து இன்று பேட்ரியட் என்ற பெயரில் யுத்த முனைகளில் பாவிக்கப் படுகிறது 1970இல் வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா இதனை முழு அளவில் பாவித்தும் வியட்நாம் கெரில்லாக்களை வெற்றி கொள்ள முடியவில்லை.

எல்லாக் கால நிலைகளிலும் இது செயற்படக் கூடியது வளைகுடாப் போரில் ஸ்கட் ஏவுகணையை ஈராக் ஏவியது என்று தெரிந்ததும் அதை வழிமறித்து அழிக்க கணணிப் பொறிகள் பொருத்தப்பட்ட பேட்ரியட்டை அமெரிக்க இராணுவம் முடுக்கி விடும். ஆனால் விதந்து பேசப்படும் இந்தப் பேட்ரியட் வளைகுடாப் போரில் பல சந்தர்ப்பங்களில் இலக்குத் தவறிய செய்திகளும் உண்டு. இதற்குக் கணணியில் ஏற்பட்ட கோளாறுதான் காரணம் என்று அமெரிக்கா சமாதானம் சொல்லிச் சமாளித்து விட்டது.

பேட்ரியட்டின் சராசரி நீளம் 5 மீற்றர். எடை .7 தொன். ஒலியை விட ஐந்துமடங்கு வேகமுள்ளது. புறப்பட்ட 2 நிமிடங்களில் ஸ்கட்டை அழிக்க வல்லது. எந்த ஸ்கட்டும் தனக்கு 80 கி. மீ தூரத்துக்குள் வந்ததும் தாக்கி அழிக்கும்.

பேட்ரியட் எப்படிச்செயல் படுகிறது?

அமெரிக்க செயற்கைக் கோள் ஈராக்கில் ஸ்கட் ஏவுகணை ஆயத்தமானால் அவுஸ்ரேலியாவில் உள்ள நிலயத்துக்கு சமிக்ஞை செய்யும். அந்த நிலையம் உடனே றியாத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமைச் செயலகத்தை எச்சரிக்கும். அதனைத் தொடர்ந்து அபாயச் சங்கு ஒலிக்கும். மக்கள் பாதுகாப்பைத் தேடிக் கொள்வார்கள்.

ஸ்கட் வான்வெளியில் கிளம்பியதும் அந்தத் தகவலையும் செயற்கைக் கோள் அனுப்பும். சமகாலத்தில ஸ்கட் வானத்தில் 150 கி மீ வரை பாய்ந்து வாயு மண்டலத்துக்குத் திரும்பி மணிக்கு 9500 கி மீ வேகத்தில் நாகாஸ்திரத்தைப் போல் பாய்ந்து வரும

பேட்ரியட் ஏவுகணைத்தள அதிகாரிகள் ஸ்கட்டின் கடத்தைக் கணணி மூலம் கணித்து அது 80 கி மீ தொலைவை நெருங்கியதும அதனை வழிமறித்துத் தாக்க பேட்ரியட்டை ஏவி விடுவார்கள். இதில்

( 7ஆம் பக்கம் பார்க்க )

## விரல்களின் சங்கீதம்

அமெரிக்காவின் ஹமஞ்சர் செல்மர் என்னும் நிறுவனம் புதியதொரு "சங்கீதக்கையுறை'' யைத் தயாரித்துள்ளது. இக்கையுறைகளை அணிந்துகொண்டு ஒரு கடின மேற்பரப்பில் ஒவ்வொரு விரல்களையும் தட்டும்போது வெவ்வேறு சுரம் வெளிப்படுகிறது. ஒவ்வொரு கையுறையும் இலத்திரனியல் மின்சுற்றுகள் ஒலி பெருக்கி என்பவற்றைக் கையுறையின் மேற்புறத்திலும் விசை ஆளியை விரல் நுனிகளிலும் கொண்டுள்ளது. 1.5 வோல்ற்று மின்னழுத்தம் கொண்ட மூன்று சிறிய கைக் கடிகாரங்களில் பாவிக்கப்படும் மின்கலங்கள் கையுறைகளிலே பொருத்தப்பட்டுள்ளன. பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்குமான வெவ்வேறு அளவுகளில் இவை விற்கப்படுகின்றன. விலை 20 அமெரிக்க டொலர்கள்.

# வருமானம் போதியளவில் உள்ளது

பண்டத்தரிப்பில் மிகவும் அமைதியான பகுதி. பலமாரிகளையும், கோடைகளையும் தாங்கி நிற்கும் கிறிஸ்தவக் கோயிலைத் தாண்டிச் சென்றால் கள்ளிறக்கும் தொழிலாளி றப்பியேல் அல்போன்சஸின் வீடு. அவரைச் சந்திப்பதற்காக அவர் வளவினுள்ளே நுழைந்த சமயம் மு. ப. பதிவொரு மணியிருக்கும். அல்போன்சஸ் வீட்டில் இல்லை! தொழிலுக்குப் போயிருந்தார்.

"அவர் வரும் நேரத்தைச் சரிவரச் சொல்லமுடியாது" என்றார் மனைவி.

நாங்கள் தலையைத் தொங்கப் போட்டபடி வீதியைப்பார்க்க, அயலில் உள்ள பனங்கூடலில் சீவலை முடித்துக்கொண்டு சைக்கிளில் வந்துகொண்டிருந்தார் அல்போன்சஸ். ஒற்றை நாடிச் சரீரம். கள்ளு நிறைந்த பரல் ஒன்று சைக்கிள் ஹாண்டிலில் இருந்தது.

சைக்கிள், பரல், கத்திக்கூடு, ஏதனங்கள்-இத்தியாதி எல்லாவற்றையும் ஒதுக்குப்புறமாய் வைத்துவிட்டுத் தங்கு தடையின்றி நேராக எம்மிடம் வந்தார். என்ன நினைத்தாரோ எழுந்துசென்று ஷேர்ட்டைப் போட்டுக்கொண்டு அருகில் வந்து உட்கார்ந்துகொண்டார்.

எம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு சொல்லாடலை ஆரம்பித்தோம், பண்டத்தரிப்பு கோவிற்பற்று தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க மேலாளர், விரிவாக்க உத்தியோகத்தர் உடனிருக்க, இவர் மட்டும் தடையின்றிப் பேசினார். தகவல்கள் அத்தனையும் அல்போன்சஸ் சொன்னவை;

ஒவ்வொரு நாளும் காலை ஆறு மணி போல் தொழிலை ஆரம்பிக்கிறேன். ஒரு மைல் சுற்றாடலில் எனது சீவல் பனைகள் உள்ளன, கூடியது மதியம் பன்னிரெண்டு மணியுடன் காலைச் சீவல் முடிவடைந்துவிடும். பின்னேரச் சீவலை நாலு மணிக்கு ஆரம்பித்து ஏழு, எட்டு மணிக்கிடையில் முடித்துவிடுவேன். மொத்தம் 26 பனைகளைச் சீவுகிறேன். காலையில் சராசரி 100 போத்தல் கள்ளுக் கிடைக்கும் மாலையில் குறைவு. 35 போத்தல் ஒழுகும் அவ்வளவு தான்.

சீவல் தொழில் எமது பரம்பரைத் தொழில் தோட்ட வேலை, தச்சுவேலை போன்ற தொழில்களும் தெரியும் ஆனால் அந்தப் பக்கம் கூட நான் தலையை வைத்துப்படுப்பதில்லை. எல்லாத்துக்கும் நேரமேது எனக்குப் பனையில் தான் கள்ளிறக்கத் தெரியும். தென்னை சீவத் தெரி

# தொழிலில் ஈடுபட மக்கள் தயாரில்லை



அல்போன்சஸ்

யாது நான் தென்னை சீவப் பழகவில்லை என்றார் அவர்.

எல்லாச் சீவல் தொழிலாளர்களையும்போல அல்போன்சஸ் பண்டத்தரிப்பு கோவிற்பற்று தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் ஓர் உறுப்பினர் பண்டத்தரிப்பு யசித்தா பாடசாலையில் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளார். குடும்பத்தில் நான்கு பிள்ளைகள். மூவர் ஆண்கள். கண்ணே கண்ணே என்று ஒரு பெண். எல்லோரும் பாடசாலை செல்கிறார்கள்.

"உங்களுடைய வருமானம் எப்படியென்று கேட்டோம்"

கிழமைக் கணக்கில்தான் சங்கம் எங்களுக்குச் சம்பளம் வழங்குகிறது திரட்டிய வருமானம்கிழமைக்கு சுமார் ரூபா 5500 கிடைக்கிறது மொத்த வருமானத்தில் அரைவாசிக் காசு ரூபா 2750 சங்கம் தருகிறது. மிகுதிப்பணம சங்கத்தில் வைப்புப்பணமாக உள்ளது அதைக் கணக்குப் பார்த்து வருட முடிவில் மொத்தமாகத் தருவார்கள். எப்படியும் மாதாந்தம் ரூபா 25,000 வரை உழைக்கலாம் சில காலங்களில் கள்ளுக் குறையும் போது மாத்திரம் குறையும். எப்படியும் மாதம் 20,000க்குக் குறையாது. 1990 ஆனி மாதத்தில் சண்டை தொடங்கியபோதுகூடச் சாப்பாட்டுக்கும் பஞ்சமில்லை சங்கமும் இயங்கியது என்றார் அவர்.

தனது பத்தொன்பதாவது வயதில் சீவல் தொழிலை

> திரு. அல்போன்சஸ் கூறுகிறார்: எப்படியும் மாதம் 20,000க்குக் குறையாது: 1990 ஆனி மாதத்தில் சண்டை தொடங்கியபோது கூடச் சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை.

ஆரம்பித்ததாகச் சொல்லும் அல்போன்சஸ் தனக்கு இப்போது 43 வயது என்கிறார். தொழில் நுட்பத்தைப்பற்றிப் பெருமையுடன் கூறுகிறார்.

இப்போது பெண் பனை ஆரம்பக்கட்டம். ஆண்பனையில் கள் ஒழுகும் காலம் முடிவடைகிறது தை தொடங்கிச் சித்திரை மட்டும் ஆண்பனையில் கள்ளிறக்கலாம். வைகாசி ஆனியிலும் சீவலாம் ஆண் பனையில் காய்வெட்டி விட்டால் 'வம்புப் பனை' (காலம் தவறி இடையில் வரும் பனை) வரும் ஐப்பசி, கார்த்திகை மட்டும் தொழில் செய்யலாம். ஆனால் காய்வெட்டும் பனை வாய்க்கவேண்டும் என்றார்.

இப்போதெல்லாம் சீவல் தொழிலாளர் குறைவு. இன்றைய சந்ததி இந்தத் தொழிலை விரும்புவதில்லை வெட்கம் ஒரு காரணம்; என்னதான் இருந்தாலும் சமூக அந்தஸ்து இத் தொழிலுக்கு இல்லை என்று இந்தச் சந்ததி எண்ணுகிறது சமூகத்தில் ஒதுக்கி வைக்கினம் என்ற யோசனையும் இருக்கிறது எனது நாலு பிள்ளைகளில் மூன்று ஆண் பிள்ளைகள். பிள்ளைகளில் ஒன்று தொழில் பழகுவது எனக்கு விருப்பம் ஆனால் அவர்கள் விரும்புகிறார்கள் இல்லை. - இவ்வாறு நினைக்கிறார் அல்போன்சஸ்.

## சங்கமும் தொழிலாளியும்

அயலில் சீவல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் தோட்டவேலை, மேசன்வேலை, தச்சுவேலை தெரிந்தவர்களும் இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் அதிக வருமானம்வந்துசேராது ஆனால் சங்கத்தில் சீவல் தொழிலாளர்களுக்குப் பொதுவாகவருமானம்பரவாயில்லை ஆனால்சங்கத்தினால்தொழில் அடிப்படையில் உதவிகள் எதுவும் இல்லை சங்கத்தில் நான் ஒரு தனிமரம். அப்படித்தான் மற்றவர்களும் என்று அங்கலாய்க்கின்றார் அல்போன்சஸ். போனவருடம்ஆனிமாதம் எனக்குக் காலில்வருத்தம், ஒருவருடம்படுத்தபடுக்கைதான் சங்கத்தில் நானும்ஒரு அங்கம். எனது மரங்களைச்சீவத் தொழிலாளி இல்லை. எனது குடும்ப வட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ மண்ணுக்காய் தன்னுயிர் நீத்த
அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலிகள்

தமிழீழ மண்ணில்
3 - 11 - 1932

தமிழீழ மண்ணுக்காய்
19 - 4 - 1988



சகல விதமான பலசரக்கு சாய்ப்புச்சாமான்களுக்கும் நாட வேண்டிய இடம்
K. K. ஸ்ரோர்ஸ்
க. கனகராசா
வாடியடி, பூநகரி

மக்கள் தினசரி ஈழநாதம் பாடசாலை உபகரணங்கள், சஞ்சிகைகள் யாவற்றையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ள
"முனீஸ்வராஸ்"
க. தெய்வேந்திரம்
வாடியடி, பூநகரி

சகல விதமான சாய்ப்புச் சாமான்களையும், அழகு சாதனப் பொருள்களையும் ஒருங்கே பெற்றுக் கொள்ள நாடுங்கள்
காண்டீபன் ஸ்ரோர்ஸ்
இ. குமாரகுலசிங்கம்
வாடியடி, பூநகரி

(B-2383)

